30.10.2025.
எம்.சி.10/2024
ம.சா.1.விஜயராணி க/பெ.சங்கர்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எதிர்மனுதாரர் எப்போது ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகன்களுக்குதான் தெரியும். எனது பெரிய மகன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் மேஸ்திரி வேலை பார்த்து வருகிறார். எனது சிறிய மகன் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். நான் அவர்களை இம்மனுவில் எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை. என் மகன்களிடம் எந்த உதவியும் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் ஓய்வு பெற்றதற்கான ஓய்வு பணம் வந்தது குறித்து எனது மகன்கள் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். அதன் பிறகு எதிர்மனுதாரர் எனது சிறிய மகனுக்கு போன்மூலம் தகவல் கொடுத்து சந்தித்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வாங்கிய கடன்களை எனது சிறிய மகன்மூலமாகதான் அடைத்ததாக எனது மகன் கூறினாரா என்றால் கூறவில்லை. சிறிய மகன் வாங்கிய கடனை எதிர்மனுதாரர் அடைத்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் எதிர்மனுதாரர் வாங்கிய ஓய்வுகால பணப்பலன்களை எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் மகனுக்காக வாங்கிய கடன்களுக்காக செலவு ஆகிவிட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்குசென்னையில் வீடு எங்கு உள்ளது என்றால் எனக்கு சென்னையில் வீடு இல்லை. ஒரு செண்டில் வீடு இருந்தது அது தற்போது இல்லை. நான் மேற்படி சொத்தினை வேறு யாருக்கும் எழுதி கொடுக்காமல் எனது பெயரில்தான் இருக்கிறது என்றால் நான் பதிவு செய்யப்படாத ஆவணம்மூலமாக எழுதி கொடுத்துவிட்டேன். நான் தற்போதும் அந்த வீட்டில் இருந்துகொண்டு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சுகர் மற்றும் பீபி மற்றும் இருதய பிரச்சனை உள்ளது. அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தனது ஓய்வுகால பணப்பலன்களை கொண்டு வட்டி தொழில் செய்து வருமானம் ஈட்டி வருகிறார் என்பதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் ஓய்வு ஊதியமாக ரூ.47,000/- சம்பாதிப்பதாக கூறியுள்ளதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அது அவருக்குதான் தெரியும்.

எதிர்மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால்தான் விருப்பு ஓய்வு பெற்றார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் பெற்ற கடனுக்காகதான் விருப்பு ஓய்வு பெற்றார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் விருப்ப ஓய்வு பெற்றதினால் அவருக்கு ரூ.33,000/-ம் மட்டும்தான் ஓய்வு ஊதியமாக பெற்றுவருகிறார் என்றால் சரியல்ல ரூ.47,000/-ம் பெற்று வருகிறார். எதிர்மனுதாரருக்கு பீபி, சுகர் மற்றும் நரம்பு தளர்ச்சி பிரச்சனை உள்ளதால் ஓய்வு ஊதியத்தை கொண்டுதான் தன்னை பராமரித்து வருகிறார் என்றால் அவரையும் பராமரித்துக்கொண்டு என்னையும் பராமரிக்கவேண்டும். எதிர்மனுதாரருக்கு செய்யாரில் சொந்தவீடு உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அவர்தான் சொன்னார். நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரருக்கு செய்யாரில் வீடு எதுவும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தான்பெற்ற தனிநபர் கடனுக்காக மாதம் ரூ.20,000/-ம் செலுத்தி வருகிறார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் அவரது குடும்பத்தில் 6 பெண்கள் ஒரேஒரு மகன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரருக்கு எந்தஒரு வசதி வாய்ப்பு இல்லையென்றாலும் அவர் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வசதியாகதான் உள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை வாயதான காலத்தில் நீதிமன்றத்திற்கு அலைகழிக்க வேண்டும் என்பதற்காகதான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள ஜீவனாம்சதொகை அதிகம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.